**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 310/2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW -11<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Dr. Mohanraj |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 14th day of August, 2026.

**(Accused present)**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நேரம் 12.20 மணி

நான் தற்போது திருவொற்றியூர் அரசு மருத்துவமனையில் பணியாற்றி வருகிறேன். நான் பொன்னேரி அரசு மருத்துவமனையில் பணிபுரிந்தபோது 23.04.2021 அன்று பாலியல் வன்கொடுமை வழக்கு சம்மந்தமாக சிவரஞ்சனி

என்பவரை மகபேறு மருத்துவரின் கருத்துரை பெறுவதற்காக பழவேற்காடு அரசு மருத்துவமனையில் இருந்து பொன்னேரி அரசு முருத்துவமனைக்கு அனுப்பிவைத்திருந்தார்கள். நான் ஏ. அர் எண் 669/2021 என பதிவு செய்து மகபேறு மருத்துவர் அனுரத்னா என்பவரின் கருத்துரைக்கு அனுப்பிவைத்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு அ.த.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது,

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சிவரஞ்சனி என்பவரை எஸ்.ஐ சாந்தி என்பவர் அழைத்து வந்தார் என்றால் சரிதான். மெமோ கொடுத்தாரா என்றால் போலீஸ் மெமோவுடன் ஆஜர் செய்தார். மேற்படி விவரத்தை விபத்து பதிவேட்டில் குறிபிடவில்லை என்றால் சரிதான். போலீஸ் மெமோவில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தற்போது ஞாபகமில்லை. அவ்வாறு போலீஸ் மெமோ எதும் கொடுக்கவில்லை என்றாலும் முதல் முறையாக நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் ஆஜர் படுத்தப்பட்டதாக சொல்லபடும் சிவரஞ்சனியிடம் விசாரணை செய்து அவர் என்ன சொன்னார் என்று எழுதிக்கொண்டேனா என்றால் விசாரித்த போது பாலியல் வன்கொடுமை என்று கூறினார். தன்னை பாலியல் வன்கொடுமை செய்த நபர் தெரிந்த நபரா அல்லது தெரியாத நபரா என்று ஏதாவது கூறினாரா என்றால் இல்லை.

நேரம் 12.32 மணி

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur